# நான் சுகமானேன்

இப்பொழுது, சுகமாகுதல் என்பது நீங்கள் வெறுமனே, “நல்லது, நான்... ஆமாம், நான் அதை விசுவாசிக்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்” என்று கூறும் ஏதோவொன்றல்ல. இப்பொழுது, அதெல்லாம் சரிதான். அதுதான் நீங்கள் செய்யக் கூடிய சிறந்த காரியமாக இருந்து, வெறுமனே மனதில் சிந்தித்தோ அல்லது வெறுமனே, “நல்லது, நான்... ஆமாம், நான் – நான் அதைக் காண்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்; நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்” என்று கூறுவீர்களானால். அதன்பிறகு நீங்கள் அதை அந்த அடிப்படையில் ஏற்றுக் கொள்வீர்களானால், தொடர்ந்து இடைவிடாமல் மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருங்கள். அதை உரத்த சத்தமாகக் கூறுங்கள். மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருங்கள்; அப்படியே தொடர்ந்து, “நான் சுகமானேன். நான் சுகமானேன்” என்று கூறிக் கொண்டிருங்கள். நீங்கள் உண்மையாகவே அதை விசுவாசிக்கும் மட்டுமாக அதையே கூறிக் கொண்டிருங்கள். நீங்கள் அதை விசுவாசிக்கும் போது, அப்பொழுது தான் அது சம்பவிக்கப் போகிறது.

நீங்கள் ஒரு எதிர்மறையான சாட்சியைக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள், “நல்லது, நான் இன்னும் இன்றைக்கும் மோசமாகவே உணருகிறேன். நான் நினைக்கிறேன் நான்...” என்று அறிக்கை செய்யும் ஒவ்வொரு தடவையும். நீங்கள் சரியாக தொடக்கத்தில் இருந்த அதே குழியில் மீண்டும் நேராகப் போய் விடுவீர்கள்.

தேவனுடைய வெகுமதியை ஏற்றுக் கொள்ளுங்கள், 53–0219, பத்தி எண் 9

# இராப்போஜனம்

தெய்வீக சுகமளித்தல் என்பது இராப்போஜனத்தில் இருக்கிறது என்பதை அறிவீர்களா? இஸ்ரவேல் ஜனங்கள், இராப்போஜனத்திற்குச் சாயலாக அப்பம் புசித்து, நாற்பது வருஷம் யாத்திரை செய்தார்கள்... அவர்கள் வனாந்தரத்திலிருந்து வெளியே வந்த போது, அவர்களில் ஒருவனும் பலவீனமாயிருந்த தில்லை: இருபத்தைந்து இலட்சம் பேர்கள். இராப்போஜனத்தில் சுகமாக்கும் வல்லமையுண்டு.

*செய்தி: பிரதிஷ்டை, 62-1104 E, பத்தி எண் E-27*

உங்களுடைய சபையில் சேர்தலை தேவன் கனப்படுத்துவதில்லை; உங்களுடைய விசுவாசத்தை அவர் எதிர்பார்க்கிறார், அவருக்குள் இருக்கிற உங்களுடைய விசுவாசத்தைக் கனப்படுத்துகிறார். அவர்... சுகம் – சுகமாக்கப்படுவதற்கு நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகக் கூட இருக்க வேண்டுவதில்லை, ஆனால் நீங்கள் சுகத்தில் தரித்திருப்பதற்கு, நீங்கள் கிறிஸ்தவராக மாற வேண்டும். “நீ போ, இனிமேல் பாவம் செய்யாதே, அல்லது இதைக் காட்டிலும் கொடியது உன்மேல் வரும்.”

*செய்தி: தேவன் அவருடைய ஜனங்களுக்குள், 50-0227, பத்தி எண் E-4*

தேவன் இசை மூலமாக சுகமளிக்கிறார்.

தேவன் அன்பினால் சுகமளிக்கிறார். பாருங்கள்? மருந்துகளின் மூலமாக தேவன் சுகமளிக்கிறார். ஜெபத்தின் மூலமாக தேவன் சுகமளிக்கிறார். சுகமாக்குவதற்கு தேவன் அநேக வழிகளை வைத்துள்ளார். அதில் எவ்வகையானது உங்களுக்குத் தேவையோ அதைப் பொறுத்தது.

***செய்தி: கவனி, 63-0428***

ஒரு மனிதனை ஆளுகை செய்வதற்கு இரண்டு அதிகாரங்கள் மட்டுமே உள்ளன. அவைகளில் ஒன்று விசுவாசம், அது நல்ல பலனைக் கொண்டு வரும்; மற்றொன்று பயம், அதற்குள் ஒரு மதிப்பும் கிடையாது. விசுவாசம் தேவனுடையது. பயம் பிசாசினுடையது.

*செய்தி: ஐக்கியம் கொள்வதற்கான வழி, 55-1009, பத்தி எண் E-26*

யாரோ ஒருவர்,
“சுகமாக்கப்படுதல்
நிரந்தரமா?” என்று
கேட்டார்.

விசுவாசம் நிலைத்திருக்கும்
மட்டும், சுகமாக்கப்பட்டதும்
நிலைத்து நிற்கும். ஆனால்,
விசுவாசம் தோல்வியடையும்
போது, உங்களுக்குக்
கிடைத்த
சுகமாக்கப்படுதலையும்
இழந்து விடுவீர்கள்.

*செய்தி: வியாதிகளும் உபத்திரவங்களும், 50-0100, பத்தி எண் 26*

இப்போது, முதலில் நீங்கள் அதை ஏற்றுக் கொண்டு, அதை விசுவாசித்து, அறிக்கை செய்யும் வரை, அவர் உங்களை சுகப்படுத்த முடியாது, அல்லது அவர் உங்களை இரட்சிக்க முடியாது அல்லது உங்களுக்காக ஒன்றும் செய்ய முடியாது. அது சரியே. நீங்கள் அதை அறிக்கை செய்ய வேண்டும். நீங்கள் அதை உணர வேண்டும் என்றல்ல, நீங்கள் அதை அறிக்கை செய்ய வேண்டும். உங்களுடைய உணர்ச்சிகளுக்கு அவர் பிரதான ஆசாரியனாக இல்லை; உங்கள் அறிக்கையின் மீது – நீங்கள் அறிக்கை செய்யும் காரியத்தின் மீது அவர் பிரதான ஆசாரியனாயிருக்கிறார் (அது சரி).

*செய்தி: உம்முடைய வார்த்தையின் படியே, கர்த்தாவே, 54-0221, பத்தி எண் E-32*



உங்களால் வியாதியை எதிர்கொள்ள முடியாதபட்சத்தில்,
உங்களால் எப்படி பாவத்தை எதிர்கொள்ள முடியும்?
நீங்கள் வியாதியை எதிர்கொள்ளாமல்,
அதைக்காட்டிலும் பெரிதான பாவத்தை
உங்களால் எதிர்க்க முடியாது.
ஏனெனில் வியாதியானது
பாவத்தின் ஒரு தன்மையாயிருக்கிறது.
நீங்கள் வியாதியையும் அதினுடைய எல்லா
தன்மைகளையும் எதிர்கொள்ளாமல்,
உங்களால் வியாதியை அல்லது பாவத்தை
ஒருபோதும் தொடமுடியாது.
அது சர்ப்பத்தின் தலையாயிருக்கிறது.
நீங்கள் தலையைக் கொல்லும்போது,
உண்மையிலேயே நீங்கள் முழு சரீரத்தையும்
கொன்றுபோடுகிறீர்கள்.
நீங்கள் அதின் தலையைக் கொல்லாமல்,
உங்களால் அதின் சரீரத்தையும்
சேர்த்து அதை கொல்ல முடியாது.

சகோ. பிரன்ஹாம்

செய்தி: விசுவாசத்திற்கான அடிப்படை அஸ்திபாரம்

இரட்சிப்பு எவ்வாறு எல்லோருக்கும் சொந்தமோ, அது போல, தெய்வீக சுகமளித்தலும் விரும்புகிற யாவருக்கும் உரியது. அது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட கிரியையாகும், கர்த்தராகிய இயேசுவின் கொடூரமான பாடுகளிலும், அவருடைய ஜெயமான உயிர்த்தெழுதலிலும் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம்.

*செய்தி: சாலமோனைக் காட்டிலும் பெரியவர் இங்கே இருக்கிறார், 57-0228, பத்தி எண் E-5*


# அவனுடைய பயமே அதை அவனிடத்தில் கொண்டு வந்தது



யோபுவின் புஸ்தகத்திலே, இங்கே என்ன சொல்லுகிறது? “யோபு பயந்தான்.” அவன் பயந்த அதே காரியம் நடந்தேறியது. அதைக் கொண்டு வந்தது என்ன? பயமே. அவனுடைய பயமே. அதுவே அது நடக்கும்படி செய்தது. அவனுடைய விசுவாசம் அவனை அதனின்று காப்பாற்றியிருக்கலாம். ஆனால் அவனுடைய பயமே அதை அவனிடத்தில் கொண்டு வந்தது. அது நடந்து விடுமோ என்று பயந்தான், அது நடந்தே தீர்ந்தது. அவன் அது நடக்காது என்று அறிந்திருந்தால், அது நடந்திருக்காது. நான் சொல்கிறது புரிகிறதா?

சகோ. பிரன்ஹாம்

செய்தி: பரிபூரண விசுவாசம், பத்தி எண் 102



உங்கள் வீடுகளில் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருங்கள். பெரிய எதிர்பார்ப்புகளோடு வாருங்கள். நீங்கள் எதையும் எதிர்பார்க்கவில்லையென்றால், நீங்கள் ஒன்றையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை. நீங்கள் எதிர்பார்ப்பது எப்படியோ, அப்படியே பெற்றுக் கொள்வீர்கள்.

*சகோ. பிரன்ஹாம்*

# நீங்கள் விசுவாசிப்பீர்களானால்



நீங்கள் விசுவாசிப்பீர்களானால்,
நீங்கள் சுகமடையாமலிருப்பது கூடாத
காரியம். இதை திரும்ப கூறுகிறேன்.
நீங்கள் விசுவாசிப்பீர்களானால்,
நீங்கள் சுகமடையாமலிருப்பது
முற்றிலும் கூடாத காரியம்.

சகோ. பிரான்ஹாம்


நீங்கள்
விசுவாசித்தால்
மட்டும் போதும்,
உங்களாலும் கூடாத
காரியம் ஒன்றுமில்லை.
சகோ.பிரான்ஹாம்


சகோ. பிரன்ஹாம்:
நீங்கள் என்ன
எதிர்பார்க்கிறீர்களோ,
அதைத்தான் நீங்கள்
பெற்றுக் கொள்வீர்கள்.
செய்தி: எதிர்பார்ப்புகள்

# நீ அதை விசுவாசிக்க மாத்திரம் வேண்டும்



நீ ஒரு கிறிஸ்தவன். இயேசு உனக்காக மரித்து சம்பாதித்த இரட்சிப்பின் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் உனக்கு உரிமை உண்டு. அவைகளெல்லாம் உன்னுடையதே! அதற்காக எல்லாம் செலுத்தப்பட்டு விட்டது. நீ அதை விசுவாசிக்க மாத்திரம் வேண்டும். அது கற்பனையல்ல; ஆனால் அதை விசுவாசி. மேலும் அது உன்னுடையதென்று உனக்குத் தெரியும். மேலும் நீ அதை உன்னுடைய சொந்தமாக்கிக் கொள்கிறாய். ஓ! அதுவே வெற்றி சிறக்கப் பண்ணுகிற விசுவாசம்; தெரிந்து கொள்!

சகோ. பிரன்ஹாம்

செய்தி: பரிபூரண விசுவாசம், பத்தி எண் 146

**Bro. Branham:**


~~~~~

உங்கள் விசுவாசம்
என்பது தேவன் உங்களில்
காண்பது, உங்கள்
கிரியைகள் என்பது
ஜனங்கள் உங்களில்
காண்பது.

~~~~~

செய்தி: விசுவாசத்தை
வெளிப்படுத்துவது
கிரியைகள்


Bro. Branham:
~~~~~
விசுவாசம் என்பது
தேவனிடத்திலிருந்து
கிடைக்கப் பெறும்
வெளிப்பாடு.
~~~~~
செய்தி: விசுவாசத்தை
வெளிப்படுத்துவது
கிரியைகள்


Bro. Branham:
~~~~~~~~~
நம்முடைய ஜெபத்திற்குப் பதில்
கிடைப்பதைப் பார்ப்பது வரை
யில், நம்முடைய ஜெபத்தை
நிறுத்தக்கூடாது.
~~~~~~~~
எதிர்பார்ப்பு,
61-0207, பத்தி எண் E-17

Bro. Branham:

~~~~~~~~

எனவே தெய்வீக
சுகமளித்தலை விசுவாசிக்கும்
ஒவ்வொரு நபரும்
வியாதியஸ்தர்களுக்காக
ஜெபிக்கும்படிக்கு உரிமையைப்
பெற்றிருக்கிறார்கள். ஆம்,
அது ஒரு பொதுவான
ஒழுங்குமுறை.

~~~~~~~~

செய்தி: எதிர்பார்ப்புகள்,
54-0228A

அப்பொழுது தேவன்,
“அவர்கள் சந்தேகப்பட்ட
காரணத்தால்,
அது பாவமாயிற்று” என்றார்.
எந்தக் காரியத்தையும்
சந்தேகப்படாதீர்கள்.
விசுவாசியுங்கள்.
சந்தேகப்படாதீர்கள்,
அது எவ்வளவு கடினமான
காரியமாயிருந்தாலும்
கவலைப்படாமல்
அதை விசுவாசியுங்கள்.

செய்தி: எபிரெயர்,
நான்காம் அதிகாரம்,
பத்தி எண் ௬௦

# உண்மையான கிறிஸ்தவன்



உங்களால் பாவம் செய்ய முடியாது. ஓ, நீங்கள் ... உங்கள் பார்வைக்கு நான் ஒரு பாவியாக இருக்கலாம், ஆனால் நான் கிறிஸ்துவுக்குள் இருப்பேனானால், தேவன் அதைக் காணமாட்டார், ஏனெனில் அவனுடைய பாவத்திற்காக பரிகாரம் செலுத்தப் பட்டாயிற்று, அவருடைய இரத்தம் அங்கே என்னுடைய பாவங் களுக்காக பரிகாரத்தை செலுத்தியது. பாருங்கள்? என்னால் பாவம் செய்ய முடியாது. ''தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்' ஏனெனில் அவன் பாவம் செய்யமாட்டான். தேவனுடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது.'' பாருங்கள்? அவன் ஒரு தவறைச் செய்வானானால், நிச்சயமாக அவன் — அவன் — அவன் — அவன், அப்பொழுது அவன் சரியாக அதை அறிக்கைச் செய்ய விரும்பு வான். அவன் ஒரு உண்மையான கிறிஸ்தவனாக இருப்பானானால், அவன் அதைச் செய்வான். அவன் அதைச் செய்யாமலிருப்பானானால், முதல் காரியத்திலேயே அவன் ஒன்றுமே கொண்டிருக்கவில்லை என்பதை அவன் காண்பிக்கின்றான். அது சரி. துவங்குவதற்கு அவன் ஒன்றையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் அவன் ஒரு உண்மையான கிறிஸ்த வனாக இருப்பானென்றால். . .

செய்தி: பிசாசியல் - உடல் சார்ந்த மண்டலம்


*Bro. Branham:*
~~~~~~~~
விசுவாசம்
ஏற்கனவே இறுகப்
பற்றிக் கொண்டது
என்பதை கிரியைகள்
காண்பிக்கின்றன.
~~~~~~~~

**Bro. Branham:**

~~~~~~~~

அவர்களுக்காக நான்
ஜெபித்துக் கொண்டே
செல்வேன். அந்த
ஜனங்கள் கலப்பில்லாத
விசுவாசத்தைப்
பெற்றிருந்தனர். அவர்கள்
அருகில் வரும்போதே
சுகமாகிவிடுவார்கள்.
~~~~~~~~


Bro. Branham
~~~~~~
இந்த யாத்திரையில்
உங்களுக்கு
தேவையானதெல்லாம்
சரியாக இப்பொழுதே
உங்களுக்குள் இருக்கிறது.
நீங்கள் செய்ய வேண்டிய ஒரே
காரியம் தேவன் மேல்
விசுவாசம் கொள்வதே.
~~~~~~
செய்தி: விசுவாசம்

149. நீங்கள் எதைக் குறித்தும் பயப்படத் தேவையில்லை . தேவன் எதை வாக்குரைத்தாரோ அதை நிறைவேற்றுவார். அதைப் பற்றி நான் எந்த ஒரு நபருக்கும் சவாலிடுகிறேன். நீங்கள் வார்த்தையை நம்பி எடுத்துக் கொண்டு அதனோடு நடவுங்கள். அப்பொழுது உங்களுக்கு என்ன சம்பவிக்கிறது என்பதை கவனியுங்கள். சகோதரனே, அது ஒவ்வொன்றும் அப்படியே நிறைவேறும், தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார். தேவன் வாக்குரைத்துள்ள ஒவ்வொரு காரியமும் நடந்தேறும்.

★★★★★

செய்தி: வெளிப்படுத்தின விசேஷம், ஐந்தாம் அதிகாரம் பாகம் II

33. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வேண்டிய ஒவ்வொரு காரியத்திற்கும், அவர்கள் அவரையே நம்பியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

★★★★★

செய்தி: சபையானது உபத்திரவத்திற்கு முன்னரே சென்றுவிடுமா?

29. இயேசு அவ்விடத்தை விட்டுச் சென்றார். அவர் சென்ற பிறகு தொல்லையானது உட்பிரவேசித்தது. இப்பொழுது அவர் உன்னையோ அல்லது நீ வசிக்கும் உன் வீட்டையோ விட்டுச் சென்ற பிறகு துன்பமானது வழியில் வந்து கொண்டிருக்கிறது. இயேசுவானவர் புறப்பட்டுச் சென்று விடும்போது, சாத்தான் ஒரு திறந்த வாசலைப் பெற்றுக் கொள்கிறான்.

★★★★★

செய்தி: அதன் பின்னர் இயேசு வந்து அழைத்தார்


GOD
BLESS
YOU